காலமாக, 10 ஆயிரம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஆகவே வேலையில்லாதவர்கள் தொகை அதிகமாக மிகுந்திருக்கின்றபோது, அவர்கள் தேர்வாணைக்குழுவை நெருங்குகிறபோது, அங்கே தவறுகள் நடக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே இந்த நல்ல காரியத்தைச் செம்மையாக நடத்துவதற்கும், இந்தத் தவறுகளை திருத்துவதற்கும் இந்த வயது வரம்பை உயர்த்தி வேலை இல்லாதவர்களுக்கு சலுகை அளிக்க அரசு முன் வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி, ஓய்வு வயதை உயர்த்தும் போது, இந்த வயது வரம்பும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்குள்ளாகவே இவர்கள் வேலை பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு அலுவலகங்கள், பல்வேறு துறைகளுக்கு கொடுக்கிற நேரத்தில், 1973, 1974, 1975-ல் பதிவு செய்தவர்களுக்கு முதல் சலுகை தந்து, கடைசியில் வயது குறைவானவர்களுக்கு இடம் கொடுக்காமல், அதிக அளவிற்கு வயது ஏறிக்கொண்டு போகிறது என்று, மேலே இருப்பவர்களுக்கு சலுகை அளித்து, 1974, 1975 மற்றும் 1976-ஆம் ஆண்டுகளில் பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை தந்து அவர்களுக்குத்தான் இப்போது வேலைக்காக அனுப்புகின்ற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே சர்வீஸ் கமிஷனில், இப்போது உயர்த்தியிருக்கின்ற அளவே போதுமானது என்ற அளவிற்கு நாம் கருதுகிறோம்.

லாட்டரி சீட்டில் பரிசுத் தொகையினைப் பெற்றுக்கொள்ளாமையால் சேர்ந்துள்ள தொகை.

389—(* வினா எண். 21722)— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1981-82, 1982-83 மற்றும் 1983-84-ல் நவம்பர் முடிய லாட்டரி சீட்டில் பரிசுத் தொகை பெறப்படாமல் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

1981-82-ம் ஆண்டு வழங்கப்படாத பரிசுத் தொகை	ரூ. 39,80,480
1982-83 ஆண்டு வழங்கப்படாத பரிசுத் தொகை	ரூ. 41,40,830
1983-84 ஆண்டு (நவம்பர் முடிய) வழங்கப் படாத பரிசுத் தொகை	ரூ. 17,39,770
மொத்தம் ரூபாய்.	98,61,080